திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

திருப்பள்ளியெழுச்சி

எளிய உரையுடன் கூடியது.

தஞ்சை

நீ. கந்தசாமிப் பிள்ளை

வெளியிட்டது.

1931.

இதன் விலை அணா $2\frac{1}{2}$

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிறுமொழி

இவ்வுலகத்தே வாழும் மக்கள், கடவுளைப் பற்றித் தாங்கள் கொண்டுள்ள கொள்கையில், இரு பெரும் பிரிவினராகப் பகுக்கப் படுவர். கடவுள் உண்டு என்பவர் ஒரு சாரர்; இல்லை என்பவர் மற்றொரு சாரர். எத்தகைய சமயக் கொள்கையினரும் இந்த இரண்டு பகுதிக்குள்ளே அடங்குவர். விரிந்து எழுந்த தத்துவங்களும், இவ்விரு கொள்கைகளையும் இரண்டு எல்லைகளாக வைத்துக் கொண்டு திகழ்வனவாகும்.

கடவுள் உண்டு என்னும் கொள்கையினை உடையார், பரந்த நிலத்தையும், உயர்ந்த மலையையும், அளப்பரும் வானையும், அதன்கண் விளங்கும் ஞாயிற்றையும், திங்களையும், உடுத்தொகையையும், இவற்றையெல்லாம் தன்னகத் தடக்கியுள்ள பாவெளியையும் காட்டி "ஈதெல்லாம் இறைவன் திருவருளால் தோன்றி, நிலவுவனவன்றோ? இயக்குவான் இன்றி இயங்குவன உளவோ? சேய்மையையும், நுண்மையையுங் காணும் கண்ணும் கருதும் கருத்தும் அற்ற சிற்றறிவேமாகிய யாம் முற்றறிவுடைய முதல்வனது நிலை கண்டுணரும் பெற்றியமோ? ஆண்டவனது நிலையையும் செயலையும், உண்டு இல்லை என்று ஆராயத் தொடங்குவது எமக்கு அடாத செயலன்றோ? எல்லாம் வல்ல எம் பெருமானை வாயார வாழ்த்திக் கைகுவித்தேத்திக் கும்பிட்டு வாழ்தலன்றோ எம் கடன்" எனக் கூறிப் பலவகைச் சான்றுகளுங் காட்டி இறைவனிடத்து அன்பு பெருகச் செய்வர். கடவுள் இல்லை என்னும் கொள்கையர் "இயற்கையில் தோன்றி இயற்கையில் நிலவி, இயற்கையில் அழியும் இவ்வுலகுக்கு இறைவன் ஒருவன் வேண்டா; ஐம்பெரும் பூதமும், உம்பரின்

ஒளியும் தோன்றிய நிலையும், அடையும் முடிவும், எம் அறிவு கொண்டு ஆராய்ந்துணரும் இயல்பினவேயாம்; இல்லாத தொன்றை உண்டெனக்கொண்டு இடர்ப்படவேண்டாம்" எனக் கூறுவர். இவ்வாருகப் பிரிக்கப்பட்ட பெரும் பிரிவு இரண்டெனக் கொள்வோமாயினும், ஒவ்வொன்றுள்ளும் பலவேறுபட்ட சிறு பிரிவுகளும் உண்டு. கொள்கையில் வேறுபட்டவர்களும், தாம் நலம்பெற வாழவேண்டு மென்னும் விருப்பத்திலும், உலகுக்கு நன்மை செய்யவேண்டு மென்னும் நோக்கத்திலும் பெரும்பாலும் ஒற்றுமையான கருத்துக்கள் உடையவர்களேயாவர். ஆனல், அவரவர் கொள்கைக்கேற்ப நலத்தைப் பற்றிய எண்ணங்களும், அடையும் வழிகளும், வாழ்க்கை முறையும் வேறுபடுவனவாகும்.

நமது தமிழ்மக்களோ, பண்டுதொட்டு இறைவன் உண்டு என்னும் கொள்கையுடையவர்களாய், அவனடி போற்றி வாழ்தலே இம்மையும் மறுமையும் நலந்தரத் தக்கது என்னும் உறுதி உடையவர்களாய் வாழ்ந்து வருபவர்கள். பகையரசனை வெல்லக் கருதிப் படையெடுத்துச் செல்லும் மன்னனும் இறைவனைப் பணிந்து 'வெற்றியருள்க' என வேண்டிச் செல்வான். சிறுபுலம் திருத்திப் பயிர்விளைவிக்கும் உழவனும் 'நல்வளம்' தருக எனக் கடவுளைத் தொழுவன். இவ்வாறே ஒவ்வொரு நிலையினரும் ஒவ்வொரு வகையாகக் கடவுளைப் பணிவர். இங்குப் பரவி வந்த சமயங்களும் சைவம், வைணவம், புத்தம், சமணம் எனப் பல திறத்தனவாயின வெனினும், பெரும்பான்மையோரால் இன்றுவரை பின்தொடரப்பட்டு வருவன சிவனை முழுமுதற்கடவுளாகக் கொண்டுள்ள சைவமும், திருமாலைக் கொண்டுள்ள வைணவமுமே யாகும். இவ்விரு சமயங்களிலும் பல பல பெரியோர்கள் தோன்றித் தமது சீரிய வாழ்க்கையாலும், பரந்த அன்பினுலும் மக்களுக்கு நல்லறிவு புகட்டி அருட் பயிரை வளர்த்து வந்தார்கள்.

இவ்வாறு உலகுய்யத் தோன்றிய பெரியார்களில், சைவ சமயத்தைச் சார்ந்தவர்களில் திருவாதவூரடிகள் என்னும் மணி வாசகப் பெருமான் ஒருவராவர். இவரால் அருளிச் செய்யப் பட்ட திருவாசகத்தின் பெருமை யாவரும் அறிந்ததே. அத் திருவாசகத்துள், இங்கு வெளியிடப் பட்டுள்ள 'திருப்பள்ளி யெழுச்சி' என்பது ஒரு பகுதியாகும். இதைப் பல நூற்றுண்டு களாகச் சைவர்கள் காலையில் ஓதுவது வழக்கமாக விருந்தது. வைகறை எழுந்து, தண்புனலாடிக் கைமலர் கொண்டு, அவன் கால் மலர் சாத்தி, ஐய! என்று ஏத்தி ஆராவன்பிற் கண்பனி ததும்பக் கடவுளைத் தொழுவர் இப் பதிகத்தைப் பாடுங்கால் பெறும் பேரின்பம் பிறர் கூறும் அளவினதன்று. அத்தகைய இப் பதிகம் இக் காலத்தில் அடைந்துள்ள நிலைமை யாவரும் அறிந்ததே. கலை நலம் பெற்று உலகியல் நிலையில் உயர்வடைந் தோருள் இப் பாடல்களின் பெயர் கூடக் கேட்டறியாதவர்கள் பலருளர் என்பதைக் கூற என் மனம் பதைக்கின்றது. ஐயகோ! தமிழே! அந்தோ! தெய்வப் பாடல்களே! நும் கதி இவ்வாறு?

இத்தகைய பழம் பாடல்களை நம்மவர் அனைவரும் படித்துப் பேரின்பம் அடையவேண்டுமென்னும் பேரவாவினால், இவற்றை யாவரும் அறிந்து கொள்ளக் கூடிய எளிய உரையுடன் பதிப்பிக் கலானேன். சிவனை வழிபடும் சைவர்கள் அனைவரும் இதை அன்பொடு காலையில் ஓதி இறைவன் திருவருளைப் பெறவேண்டு கின்றேன். இது அவர்கள் கடமையாகும். பிற சமயத்தாரும், கடவுளே இல்லை என்னும் கொள்கையினரும், இப் பாடல்களின் இலக்கியச் சுவை கருதியேனும் இதைப் படிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப் பதிகத்தில் பொழுது புலரும் போதுள்ள இயற்கைத் தோற்றத்தை வனப்புற, உள்ளதை உள்ளபடி நவது பாட்டில், குயில் கூவுவதும், கோழி கூவு வதும், சங்குகளின் முழக்கம் செவிப்படுவதும், நக்ஷத்திரங்கள் சிறிது சிறிதாக ஒளி குன்றுவதும் விளக்கமாகக் கூறி யிருப்பது எத்தகையோருக்கும் இன்பம் விளைவிக்காதிராது. இவ்வாறே பலவும் உள. இதன் நலம் யாவும், தமிழ் மக்கள் அனைவரும் கண்டு களித்து இன்புறும் வண்ணம் இறைவன் திருவருள் செய் வானாக. பிழை பொறுத்தல் பெரியார் கடன்.

நீ. கந்தசாமி,
தஞ்சை.

மார்கழி. க.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருப்பள்ளியெழுச்சி

க

போற்றி! என் வாழ்முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது, பூங்கழற் கிணை துணை மலர்கொண்
டேற்றி! நின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்,
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
ஏற்றுயர் கொடிஉடையாய்! எனை உடையாய்!
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே!

உரைநடை முறை.

சேற்று இதழ்க் கமலங்கள் மலரும் தண்வயல் சூழ் திருப் பெருந்துறை உறை சிவபெருமானே! ஏற்று உயர் கொடி உடையாய்! எனை உடையாய்! எம்பெருமான்! என் வாழ் முதல் ஆகிய பொருளே! போற்றி! புலர்ந்தது; பூங்கழற்கு இணை துணை மலர் கொண்டு ஏற்றி, நின் திருவடி தொழுகோம்; நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும் எழில் நகை கொண்டு பள்ளி எழுந்தருளாயே!

இதன் பொருள்.

சேறு	=சேற்றிலே (உண்டாகிற)
இதழ்க் கமலங்கள்	=இதழ்களை உடைய தாமரை மலர்கள்
மலரும்	=மலர்கின்ற
தண்வயல் சூழ்	=குளிர்ச்சி பொருந்திய வயல்கள் சூழ்ந்த

திருப்பெருந் துறை உறை	=	திருப்பெருந்துறை என்னும் பதியிலே எழுந்தருளிய
சிவபெருமானே	=	சிவபெருமானே
ஏறு உயர் கொடி உடையாய்	=	எருதை உயர்வு படுத்தி அமைத்துக் கொண்ட கொடியை உடையவனே
எனை உடையாய்	=	என்னை (தனக்கு அடிமையாக) [உடையவனே
எம் பெருமான்	=	எமது பெருமானே
என் வாழ்முதல் ஆகிய பொருளே	=	என்னுடைய வாழ்வுக்கு மூலமாகிய பொருளே
போற்றி	=	வணக்கம் (செய்கிறேன்)
புலர்ந்தது	=	(பொழுது) விடிந்தது
பூங்கழற்கு இணை துணைமலர் கொண்டு	=	(உன்னுடைய) மலர் போன்ற திருவடிகளுக்கு ஒத்த துணையாக மலர்களைக் கொண்டு
நின் திருவடி தொழுகோம்	=	உன்னுடைய திருவடிகளை வணங்குகின்றோம்
எமக்கு அருள் மலரும்	=	(உன்னுடைய அடியார்களாகிய) எங்களுக்கு (உன்னுடைய) திருவருளைத் தருவதாகிய
எழில்நகை கொண்டு	=	அழகிய முறுவலைக் கொண்டு
பள்ளி எழுந்தருளாயே	=	திருப்பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக

குறிப்பு.

திருப்பெருந்துறை உறை சிவபெருமானே! பொழுது விடிந்தது. மலர்கொண்டு உன் திருவடிகளை வணங்குகின்றோம், திருவருள் பாலிக்கும் முறுவலொடு பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக என்பது கருத்து. சிவபெருமானுடைய கொடி "ஏற்றுக் கொடி" ஏறு—காளை. "சேறு," "ஏறு" என்னும் சொற்கள், "இதழ்," "உயர் கொடி" என்னும் சொற்களோடு சேரும்போது வேற்றுமைப் புணர்ச்சி என்னும் இலக்கண விதியால், "சேற்று," "ஏற்று" என்று ஆகின.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருப்பள்ளியெழுச்சி

உ

அருணன் இந்திரன்திசை அணுகினன்; இருள்போய்
அகன்றது; உதயம் நின் மலர்த்திருமுகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல் அங்கண்ணும்
திரணிரை அறுபதம் முரல்வன; இவைஓர்;
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
அருணிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகடலே! பள்ளி எழுந்தருளாயே!

உரை நடைமுறை

திருப்பெருந்துறை உறை சிவபெருமானே! அருள் நிதி தரவரும் ஆனந்த மலையே! அலைகடலே! அருணன் இந்திரன் திசை அணுகினன்; இருள் போய் அகன்றது; அண்ணல் அம் கண்ணும் திரள் நிரை அறுபதம் முரல்வன; இவை ஓர்! நின் மலர்த் திருமுகத்தின் கருணையின் சூரியன் எழ எழ, நயனக் கடிமலர் மலர, பள்ளி எழுந்தருளாயே!

இதன் பொருள்

திருப்பெருந்துறை உறை சிவபெருமானே	= திருப்பெருந்துறை என்னும் பதியிலே எழுந்தருளிய சிவபெருமானே
அருள் நிதி	= (உனது) அருளாகிய செல்வத்தை
தரவரும்	= (உனது அடியார்க்கு) கொடுக்கவருகிற
ஆனந்த மலையே	= ஆனந்தமாகிய மலையே
அலைகடலே	= அலை (பொருந்திய) கடலே
அருணன்	= சூரியன்

இந்திரன் திசை	= கிழக்குத் திக்கை
அணுகினன்	= நெருங்கினன்
இருள்	= இருளானது
போய் அகன்றது	= போய் நீங்கிற்று
அண்ணல் அம் கண்ணும்	= பெருமை பொருந்திய அழகிய கண்கள் போன்ற
திரள் நிரை அறுபதம்	= திரண்ட கூட்டமாகிய வண்டுகள்
முரல்வன	= ஒலிக்கின்றன
இவை ஓர்	= இவற்றை (நீ) அறிந்தருள்க
நின் மலர்த் திரு முகத்தின்	= உன்னுடைய மலர்ந்த அழகிய முகத்தினிடத்தே
கருணையின் சூரியன்	= கருணையாகிய சூரியன்
எழ எழ	= (மேலும் மேலும்) தோன்ற
நயனக் கடிமலர் மலர	= கண்களாகிய நறுமணம் கமழும் மலர்கள் மலர
பள்ளி எழுந் தருளாயே	= திருப்பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக

குறிப்பு

திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமானே! ஆனந்த மலை போன்றவனே! அலைகடல் நிகர்த்தவனே! சூரியன் கீழ்த்திசை நெருங்கினன்; வண்டுகள் பாடுகின்றன; நினது கருணை மலிந்த முகமாகிய சூரியன் எங்களுக்குத் தோன்றும்படி அழகிய கண்கள் மலர்ந்து பள்ளி எழுந்தருள்வாயாக. "மலையே" "கடலே" என்பன உருவக அணி. கிழக்குத் திசைக்குரிய கடவுள் இந்திரன் ஆதலால் கீழ்த்திசை 'இந்திரன் திசை' எனப்பட்டது. இவ்வாறே ஒவ்வொரு திக்குக்கும் ஒவ்வொரு கடவுளரை உரியவர்களாகக் கொள்ளுதல் பழைய வழக்கு. "அருள் நிதி தரவரும்" என்பதை "ஆனந்த மலையே" என்பதனோடும், "அலைகடலே" என்பதனோடும் கூட்டிக்கொள்க. "எழ எழ" என்பது அடுக்கு.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருப்பள்ளியெழுச்சி

—∘○※○∘—

௧

கூவின பூங்குயில்; கூவின கோழி;
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்;
ஓவின தாரகை ஒளி; ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது; விருப்பொடு நமக்குத்
தேவ! நற் செறிகழற் றாளிணை காட்டாய்!
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
யாவரும் அறிவரியாய்! எமக்கெளியாய்!
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே!

உரை நடைமுறை

திருப்பெருந்துறை உறை சிவபெருமானே! யாவரும் அறிவரியாய்! எமக்கு எளியாய்! எம்பெருமான்! தேவ! பூங்குயில் கூவின; கோழி கூவின; குருகுகள் இயம்பின; சங்கம் இயம்பின; தாரகை ஒளி ஓவின; உதயத்து ஒளி ஒருப்படுகின்றது; நல் செறிகழல் தாள் இணை விருப்பொடு நமக்குக் காட்டாய்! பள்ளி எழுந்தருளாயே!

இதன் பொருள்

திருப்பெருந்துறை உறை சிவபெருமானே	= திருப்பெருந்துறை என்னும் பதியில் எழுந்தருளிய சிவபெருமானே
யாவரும் அறிவரியாய்	= எத்தன்மையராலும் அறிந்து கொள்வதற்கு அரியவனாக உள்ளவனே

எமக்கு எளியாய்	=(உனது அடியார்களாகிய) எங்களுக்கு (அறிந்துகொள்வதற்கு) எளியவனாக உள்ளவனே
எம் பெருமான்	=எமது பெருமானே
தேவ	=இறைவ
பூங்குயில் கூவின	=அழகிய குயில்கள் கூவுகின்றன
கோழி கூவின	=கோழிகள் கூவுகின்றன
குருகுகள் இயம்பின	=பறவைகள் பாடுகின்றன
சங்கம் இயம்பின	=சங்குகள் (ஒலி) முழுங்குகின்றன
தாரகை ஒளி ஓவின	=விண் மீன்கள் ஒளி நீங்கின
உதயத்து ஒளி ஒருப் படுகின்றது	=விடியற்காலத்து ஒளி திரண்டு விளங்குகின்றது
நல்செறிகழல் தாளிணை	=நல்ல (வீரம்) செறிந்த கழல்களை அணிந்த திருவடிகளை
விருப்பொடு நமக்குக் காட்டாய்	=அன்பொடு எங்களுக்குக் காட்டியருள்க
பள்ளி எழுந்தருளாயே	=திருப்பள்ளி யினின்றும் எழுந்தருள் வாயாக

குறிப்பு

எத்தன்மையாராலும் அறிதற்கு அரியவனாகவும், அடியார்களாகிய எங்களுக்கு எளியவனாகவும் உள்ள இறைவனே! குயில்கள் கூவின; விண் மீன்கள் ஒளி மங்கின; கீழ்த்திசையில் விடியற் காலத்து ஒளி தோன்றுகின்றது; நினது திருவடியை எங்களுக்கு அருளும்படி பள்ளி எழுந்தருள்வாயாக. சங்கை இயம்பினர்கள் என்பதை சங்கம் இயம்பின எனக் கூறப் பட்டிருக்கிறது. இது, "கருவி கருத்தா" எனப்படும். உதயத்து என்பதற்கு உதயமலையினிடத்து என்றும் பொருள் கூறுவர். இறைவன் யாவர்க்கும் அறிதற்கு அரியவன் எனினும் அடியார்க்கு எளியவன் என்பது கருதத்தக்கது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருப்பள்ளியெழுச்சி

௪

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்;
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்;
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்;
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே!

உரைநடை முறை.

திருப்பெருந்துறை உறை சிவபெருமானே! என்னையும் ஆண்டு கொண்டு இன்னருள் புரியும் எம்பெருமான்! ஒருபால் இன்னிசை வீணையர் யாழினர்; ஒருபால் இருக்கொடு தோத்திரம் இயம்பினர்: ஒருபால் மலர் துன்னிய பிணைக் கையினர்; ஒருபால் தொழுகையர், அழுகையர், துவள்கையர்; ஒருபால் சென்னியில் அஞ்சலி கூப்பினர்; பள்ளி எழுந்தருளாயே!

இதன் பொருள்

திருப்பெருந்துறை உறை சிவபெருமானே	= திருப்பெருந்துறை என்னும் பதியில் எழுந்தருளிய சிவ பெருமானே

என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும் எம் பெருமான்	=	(மிகவும் தாழ்ந்தவனுகிய) என்னையும் (உனக்கு அடிமையாக) ஆண்டுகொண்டு (உனது) இனிமையான அருளைப் பாலிக்கும் எமது பெருமானே
ஒருபால் இன்னிசை வீணையர் யாழினர்	=	(நின்னைப் பணிவோர்) ஒருபுறம் இனிமையான இசையையுடைய வீணையையும் யாழையும் வாசிக்கிருர்கள்
ஒருபால் இருக்கொடு தோத்திரம் இயம்பினர்	=	ஒருபுறம் வேதம் ஓதுகின்ருர்கள் போற்றி பாடுகின்ருர்கள்
ஒருபால் மலர் துன்னிய பிணைக் கையினர்	=	ஒருபுறம் மலர் நெருங்கிய மாலையை (நினக்குச் சூட்ட) கையிலேந்தி நிற்கின்ருர்கள்
ஒருபால் தொழுகையர். அழுகையர்; துவள்கையர்,	=	ஒருபுறம் (நின்னை) தொழுகின்ருர்கள் (அன்பு மேலீட்டால்) அழுகின்ருர்கள் (மெய்ம்மறந்து) சோர்ந்து வீழ்கின்ருர்கள்
ஒருபால் சென்னியில் அஞ்சலி கூப்பினர்	=	ஒருபுறம் தலைமேல் கைகுவித்துக் கும்பிடுகின்ருர்கள்
பள்ளி எழுந்தருளாயே	=	திருப்பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக

குறிப்பு.

சிவபெருமானே நினதடியார் உன்னைப் போற்றியவர்களாய், வீணையும் யாழுங்கொண்டு இன்னிசை எழுப்பியும், வேதம் ஓதியும், கீதம் பாடியும், சூட்டுவதற்காக மலர் மாலையைக் கையிலேந்தியும், தொழுதும், அழுதும், கைகுவித்துக் கும்பிட்டும் பலபடியாக நிற்கின்ருர்கள் (பொழுது புலர்ந்தது) பள்ளி எழுந்தருள்வாயாக. என்னையும் என்பதிலுள்ள உம் என்பது இழிவு சிறப்பும்மை. வீணையர் யாழினர் என்பது வீணை வாசிப்பவர் யாழ்வாசிப்பவர் எனவிரியும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருப்பள்ளியெழுச்சி

௫

"பூதங்க டோறு நின் றுய்" எனின் அல்லால்
"போக்கிலன் வரவிலன்" என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக் கண்டறிவாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னு!
சிந்தனைக்கும் அரியாய்! எங்கண் முன்வந்
தேதங்கள் அறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே!

உரை நடைமுறை

சீதங்கொள் வயல் திருப்பெருந்துறை மன்னு! சிந்தனைக்கும் அரியாய்! எங்கள் முன் வந்து ஏதங்கள் அறுத்து எம்மை ஆண்டு அருள் புரியும் எம்பெருமான்! புலவோர் நினை "பூதங்கள் தோறும் நின்றுய்! எனின், அல்லால் "போக்கிலன் வரவிலன்" எனக் கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால் உனைக் கண்டறிவாரைக் கேட்டறியோம், பள்ளி எழுந்தருளாயே!

இதன் பொருள்

சீதங்கொள்வயல் திருப் பெருந்துறை மன்னு	—குளிர்ச்சி பொருந்திய வயல்கள் (சூழ்ந்த) திருப்பெருந்துறையில் எழுந்தருளிய இறைவனே
சிந்தனைக்கும் அரியாய்	—(எங்களுடைய) மனத்துக்கும் (அளவிடுதற்கு) அருமையாக உள்ளவனே

எங்கள் முன்வந்து எதங்கள் அறுத்து	=	(எளியேமாகிய) எங்கள் முன்வந்து (எங்களுடைய) குற்றங்களை (வேர்) அறுத்து
எம்மை ஆண்டு அருள் புரியும் எம்பெருமான்	=	எங்களை ஆட்கொண்டு அருள் புரியும் எமது பெருமானே
புலவோர்	=	(யாவும் உணர்ந்த மாசற்ற சிந்தையராகிய) ஞானிகள்
நினை	=	உன்னை
பூதங்கள் தோறும் நின்றாய் எனின்	=	நிலம், நீர், தீ, வளி, வான் எனும் (ஐம்பெரும்) பூதங்களிலே நிலவி நிற்கின்றாய் என்றாவது
அல்லால்	=	(அவ்வாறு புகழ்வது) தவிர்ந்தால்
போக்கிலன் வரவிலன் என	=	(அழிதல் தோன்றுதல் என்னும்) போக்கும் வரவும் இல்லாதவன் என்று
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்	=	(உன்னைப் புகழ்ந்து) பாட்டுகள் பாடுதலும் (மெய் மறந்து) ஆடுதலும் அல்லாமல்
உனைக் கண்டறிவாரைக் கேட்டறியோம்	=	உன்னைக் (புலன்களாரக்) கண்டு அறிந்தவர்களை யாம் கேட்டாவது அறிந்தோமில்லை
பள்ளி எழுந்தருளாயே	=	திருப்பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக

குறிப்பு

திருப்பெருந்துறை அரசே! மனதால் எண்ணுதற்கும் எட்டாதவனே! எங்கள் குற்றங்களைப் போக்கி ஆட்கொண்ட பெருமானே! முக்குற்றம் நீங்கி முற்றவுணர்ந்த முனிவரும் நின்னைப் பலபடியாகப் புகழ்ந்து பாடியும் ஆடியும் மகிழ்ந்தவரல்லால், நின்னைப் புலனாரக் கண்டவரிலரே, கண்டார் ஒருவர் உளர் எனயாம் கேட்டதுமிலமே, பள்ளி எழுந்தருள்வாயாக என்பது கருத்து.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருப்பள்ளியெழுச்சி

௬

பப்பற வீட்டிருந் துணரும் நின் அடியார்
பந்தனை வந்தறுத்தார், அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத்தியல்பின்
வணங்குகின்றார், அணங்கின் மணவாளா!
செப்புறு கமலங்கண் மலரும் தண்வயல்சூழ்
திருப்பெருந்துறை யுறை சிவபெருமானே!
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே!

உரைநடை முறை

அணங்கின் மணவாளா! செப்புறு கமலங்கள் மலரும் தண் வயல் சூழ் திருப்பெருந்துறை உறை சிவபெருமானே! இப் பிறப்பு அறுத்து எம்மை ஆண்டு அருள் புரியும் எம்பெருமான்! பந்தனைவந்து அறுத்தார், பப்பற வீட்டிருந்து உணரும் நின் அடியார், மைப்புறு கண்ணியர் அவர் பலரும் மானுடத்து இயல்பின் வணங்குகின்றார். பள்ளி எழுந்தருளாயே!

இதன் பொருள்

அணங்கின் மணவாளா	= உமாதேவியின் மணவாளனே
செப்பு உறு கமலங்கள் மலரும்	= கிண்ணங்களைப் போன்ற வடிவமுடைய தாமரை மலர்கள் மலரும்
தண் வயல் சூழ்	= குளிர்ச்சி பொருந்திய வயல்கள் சூழ்ந்த

திருப்பெருந்துறை உறை	= திருப்பெருந்துறையில் அமர்ந்த
சிவபெருமானே	= சிவபெருமானே
இப்பிறப்பு அறுத்து	= இந்தப்பிறப்பை நீக்கி
எம்மை ஆண்டு அருள் புரியும்	= எம்மை ஆட்கொண்டு அருள் செய்கின்ற
எம்பெருமான்	= எமது பெருமானே
பந்தனை வந்து அறுத்தார்	= பிறவிப் பிணிகளை அறுத்தவராய்
பப்பு அற வீட்டிருந்து உணரும்	= (தமக்கு இணையென்னும்) ஒப்பு நீங்க, முத்தி நிலையினின்றும் (நின்னை) அறியும்
நின் அடியார்	= உன்னுடைய அடியார்களும்
மைப்பு உறு கண்ணியர்	= மை தீட்டப் பெற்ற கண்களையுடைய அரம்பையரும்
அவர் பலரும்	= இத்தகையார் பலரோடும்
மானுடத்து இயல்பின்	= மானிட வடிவோடு வந்து
வணங்குகின்றார்	= உன்னை வணங்குகின்றார்
பள்ளி எழுந்து அருளாய்	= திருப்பள்ளியினின்றும் எழுந்தருளாய்

குறிப்பு

பார்வதிநாயக! வீட்டின்பம் துய்க்கும் நின் அடியாரும் அரம்பையரும் மக்கள் யாக்கையோடு நின்னை வணங்குகின்றார். பள்ளி எழுந்தருள்க. பப்பு என்பது மனப் பரப்பு என்பாரும் உளர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருப்பள்ளியெழுச்சி

௭

அதுபழச் சுவையென, அமுதென, அறிதற்கு
அரிதென, எளிதென அமரரும் அறியார்;
இது அவன் திருவுரு. இவன் அவன் எனவே,
எங்களை ஆண்டுகொண்டு, இங்கெழுந்தருளும்,
மதுவளர் பொழில் திரு உத்தரகோச
மங்கை உள்ளாய்! திருப்பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்,
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே !

உரைநடை முறை

பாட்டில் அமைந்த படியே—இவ்வாறு வருவது ஆற்று நீர்ப் பொருள்கோள் எனப்படும்.

இதன் பொருள்

அது பழச்சுவையென	=(உன்னுடைய நிலைமையாகிய) அது பழத்தின்கண் சுவையோ எனவும்
அமுதென	=இறப்பின்றிக் காத்தலின் அமுதோ எனவும்
அறிதற்கு அரிதென எளிதென	} = அறிந்துகொள்ளுதற்கு அரியதோ எனவும் எளியதோ எனவும்
அமரரும் அறியார்	=தேவர்களும் அறியார்
இது அவன் திருவுரு	=அவன் திருவுருவம் இது,தான் எனவும்

7121

இவன் அவன் எனவே	= இவன்தான் அவன் எனவும் (யாங்கள் அறிந்து கொள்ளும்படி)
எங்களை ஆண்டுகொண்டு	= எங்களை ஆட்கொண்டு
இங்கு எழுந்தருளும்	= இவ்விடத்தே தோன்றி அருளா நின்ற
மதுவளர் பொழில்திரு உத்தரகோச மங்கை உள்ளாய்	= தேன்பொழியும் சோலைகள் சூழ்ந்த அழகிய உத்தரகோச மங்கை என்னும் திருப்பதியில் உள்ளவனே
திருப்பெருந்துறை மன்னா	= திருப்பெருந்துறையில் அமர்ந்த அரசனே
எமைப் பணிகொளும் ஆறு அது கேட்போம்	= எங்களை ஆட்கொள்ளும் வழி எதுவோ அதனைக்கேட்டு (அவ்வழி பணி இயற்றுவோம்)
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே	= எம்முடைய பெருமானே திருப்பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக

குறிப்பு

பழத்தில் சுவைபோல எங்கும் உள்ளாயென்பர் சிலர்-என்றும் இறவாத தன்மையை எய்துவித்தலால் அமுதம் என்பர் சிலர். காட்சி கருதல் உரையென்னும் அளவைகளால் அறிதற்கு அரியாய் என்பர் சிலர். நான் என்பது அற்ற விடத்தே அடைதற்கு எளியாய் என்பர் சிலர். இவன் என்பர் சிலர். அவன் என்பர் சிலர். இவ்வளவினரேயன்றி நெடிய வாணாளை யுடைய தேவரும் உன் நிலையை அறிந்திலர். அங்ஙனமாகவும், எம்மனோரை மிக எளிவந்து ஆட்கொண்டு இங்கே திருப்பெருந்துறையில் எழுந்தருளிய அரசே! தேன் பெருகும் சோலைகளால் சூழப்பட்ட உத்தரகோச மங்கையில் உள்ளாயும் நீயே, மிக எளியேம் ஆகிய எம்மையும் ஓர் பொருளென்று எண்ணி ஆட்கொண்ட முறைமைக்கு எம்மிடத்துள்ள தகைமை யாதென்று நின்னைக் கேட்கவேண்டும். எம்பெருமானே திருப்பள்ளியினின்றும் எழுந்தருளாய்! என்றும் உரை கூறுவர்.

'அதுபழச்சுவையென' என்பதை

'இந்தனத்தின் எரிபாலின் நெய்பழத்தின் இரதம்
எள்ளின் கண் எண்ணெயும்போல் எங்குமுளன் இறைவன்'

என்னும் சிவஞான சித்தியார் கருத்துடன் நோக்குக.

திருச்சிற்றம்பலம்

திருப்பள்ளியெழுச்சி

௧

முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர், யாவர் மற்று அறிவார்?
பந்தணை விரலியும், நீயும் நின் அடியார்
பழங் குடில்தொறும் எழுந்தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி,
அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்!
ஆரமுதே! பள்ளி எழுந்தருளாயே!

உரை நடைமுறை

பந்தணை விரலியும், நீயும் நின் அடியார் பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே! முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய், மூவரும் அறிகிலர், யாவர் மற்று அறிவார்? செந்தழல் புரை திருமேனியும் காட்டி, திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி, அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய், ஆரமுதே! பள்ளி எழுந்தருளாயே!

இதன் பொருள்

பந்தணை விரலியும் நீயும்	= பந்து அணைந்த விரல்களை உடைய உமாதேவியும் நீயும்
நின் அடியார் பழங் குடில் தொறும்	= உன்னுடைய அடியவர்களுடைய பழைய சிற்றில்கள் தோறும்
எழுந்தருளிய பரனே	= எளி வந்து அருளிய இறைவனே
முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்	= எல்லாவற்றுக்கும் முதலாகவும் நடுவாகவும் இறுதியாகவும் உள்ளாய்

மூவரும் அறிகிலர் = உனது நிலைமையை அரன் அயன் அரியெனும் மூவரும் அறிந்தாரிலர்

யாவர் மற்று அறிவார் = வேறு யாவர் அறியவல்லார்

செந்தழல் புரை திரு மேனியும் காட்டி = சிவந்த தழலை யொக்கும் திரு மேனியையும் காட்டி

திருப்பெருந்துறை உறை கோவிலும் காட்டி = திருப்பெருந்துறையிலே உள்ள திருக்கோயிலையும் காட்டி

அந்தணன் ஆவதும்காட்டி = அழகிய தண்மையை உடையவன் என்பதும் காட்டி

வந்து ஆண்டாய் = வலிய வந்து ஆண்டுகொண்டாய்

ஆரமுதே = அரிய அமுதமே

பள்ளி எழுந்தருளாயே = திருப்பள்ளியினின்றும் எழுந் தருள்வாயாக

குறிப்பு

அவன் அவள் அது வென்னும் பாகுபாட்டையுடைய உலகம் தோன்றுவதற்கு முன்னே தோன்றிணய், அவ்வுலகம் ஒடுங்கின காலத்தேயும் நீ உள்ளாய், இடைப்பட்ட காலத்தே யும் நீ உள்ளாய். நெடியவாணளையுடைய நான்முகன் திருமால் உருத்திரன் என்னும் மூவரும் உன்னுடைய உருவம் இத் தன்மைத்தென்று இன்னும் அறிந்தாரிலர். அங்ஙனமாகச் சில வாழ்நாள் பல்பணிச் சிற்றறிவோருள் யாவர் உன்னை அறியும் ஆற்றலுடையவர். பந்தணைந்த விரல்களையுடைய அம்மையோ டும் எளிய அடியாருடைய பழைய குடில்கள்தோறும் எளிதாக எழுந்து காட்சியருளிய பரமனே! நெருப்பெனச் சிவந்த திரு மேனியையும் காட்டி, திருப்பெருந்துறையில் உள்ள கோயிலை இருப்பிடமாகக் காட்டி, அந்தணவேடத்தையும் காட்டிக் குரு வாய் வந்து என்னை ஆண்டாய்! அடியார்கள் மனத்தாலும் ஐம் பொறிகளாலும் பருகும் அரிய அமுதே! பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக என்பது கருத்து மகளிர் பந்தாடுதல் பண்டைய வழக்காகலின் 'பந்தணை விரலி' என்றார்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருப்பள்ளியெழுச்சி

௧

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே உன தொழுப்படியோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே
வண் திருப்பெருந்துறையாய் வழி அடியோம்
கண்ணகத்தே நின்று களிதரு தேனே
கடலமுதே கரும்பே விரும்படியார்
எண்ணகத்தாய் உலகுக்கு உயிரானாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருள்வாயே

உரை நடைமுறை

பாடலில் அமைத்தபடியே-(ஆற்றுநீர்ப் பொருள் கோள்)

இதன் பொருள்

விண்ணகத் தேவரும் நண்ணவும்மாட்டா விழுப்பொருளே	=	வானுலகத்தில் வாழும் அமரராலும் நெருங்குதற்கும் ஒண்ணாத பெரிய பொருளே
உன் தொழும்பு அடியோங்கள் மண்ணகத்தே வந்து வாழச் செய்தோனே	=	உனக்குத் தொண்டு செய்யும் அடியவர்களாகிய நாங்கள் மண்ணுலகத்தில் வந்து (வீட்டின்பம் எய்தி) வாழும்படி செய்பவனே

வண் திருப்பெருந் துறையாய்	= வளம் பொருந்திய திருப்பெருந் துறையில் வாழ்வோனே
தொழுப்படியோம் கண்ணகத்தே நின்று களிதருதேனே	= வழி வழி அடியார்களாகிய எங்கள் கண்ணின் உள்ளே நின்று பேரின்பம்தரும் தேனே
கடல் அமுதே, கரும்பே	= பாற்கடலினின்றும் தோன்றிய அமுதே, கரும்பே
விரும்பு அடியார் எண்ணகத்தாய்	= விரும்புகின்ற அடியார்களது நினைவினுள்ளே நின்றவனே
உலகுக்கு உயிரானாய்	= உலகங்களுக்கு உயிராய் விளங்குபவனே
எம்பெருமான்	= எமது பெருமானே
பள்ளி எழுந்தருளாயே	= திருப்பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக

குறிப்பு

உண்டார்க்கினிக்கும் தேன் போலாது கண்டார்க்கும் இனிக்கும் தேன் எமது இறைவன் என்பது தோன்ற 'கண்ணகத்தே நின்று களிதரு தேனே' எனக் கூறினார். தேன் கரும்பு, அமுது முதலிய போல் இனிமையாகவுள்ள இறைவனை, தேனே, கரும்பே, என்பது உருவகவணி. 'உலகுக்கு உலகானாய்' என்றும் பாடம் ஓதுவர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருப்பள்ளியெழுச்சி

௧

"புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே, இந்தப்பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று" நோக்கித்
திருப்பெருந்துறை உறைவாய்! திருமாலாம்
அவன் விருப்பெய்தவும், மலரவன் ஆசைப்
படவும், நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்,
ஆரமுதே! பள்ளி எழுந்தருளாயே!

உரைநடை முறை

திருப்பெருந்துறை உறைவாய்! ஆரமுதே! 'புவனியிற் போய் பிறவாமையின், நாள் நாம் அவமே போக்குகின்றோம்; இந்தப் பூமி சிவன் உய்யக் கொள்கின்றவாறு' என்று நோக்கித் திருமாலாம் அவன் விருப்பெய்தவும், மலரவன் ஆசைப்படவும், நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும் அவனியிற் புகுந்து எம்மை ஆட்கொள்ள வல்லாய், பள்ளி எழுந்தருளாயே!

இதன் பொருள்

திருப்பெருந்துறை உறைவாய்	= திருப்பெருந்துறையில் வாழ்வோனே
ஆரமுதே	= அருமையான அமுதே
புவனியில் போய் பிறவாமையில்	= நிலவுலகத்தில் சென்று பிறவாமையினால்
நாள் நாம் அவமே போக்குகின்றோம்	= வாணாளை வீணாகக் கழிக்கின்றோம்

இந்தப் பூமி சிவன் உய்யக் கொள்கின்றவாறு என்று நோக்கி	= (அடியாரை) இந்த நிலவுலகம் சிவபெருமான் ஆட்கொள்ளுகின்ற இடம் என்று தெரிந்து
திருமாலாம் அவன் விருப்பெய்தவும்	= திருமாலாகிய பெரியோன் விருப்பம் கொள்ளவும்
மலரவன் ஆசைப் படவும்	= நான்முகன் ஆசைப் படவும்
நின் அலர்ந்த மெய்க் கருணையும்	= உன்னுடைய மலர்ந்த பேரருளும்
நீயும் அவனியிற் புகுந்து	= நீயுமாக இவ்வுலகத்தில் வந்து
எம்மை ஆட்கொள்ள வல்லாய்	= எங்களை அடிமைகொள்ள வல்லவனே
பள்ளி எழுந்தருளாயே	= திருப்பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக

குறிப்பு

திருக்கண்ணை மலராகச் சாத்தி வழிபட்ட திருமாலின் தொண்டினையும், பிரமதேவனுடைய தொண்டினையும் ஓர் பொருட்டாக எண்ணாமல், திருப்பெருந்துறை யென்னும் தலத்தில் மணிவாசகப் பெருமான் தொண்டிற்குப் பரிந்து அவரை எளிதின் ஆட்கொண்டதனாலே, அத் திருமாலும் பிரமனும் மனம் பொறாமல், சிவபெருமான் அடியாரை ஆட்கொள்ளும் உலகம் மண்ணுலகமே; அந்த மண்ணுலகத்தில் நாம் போய்ப் பிறவாமையால் கற்பகோடி காலம் வீணாகப் போக்கினோம் என்று வருந்தினார் என்பது கருத்து.

> 'ஆனார் இலையே அயனும் திருமாலும்
> காணார் அடிமுடி காண்பதற்கு—மேனாள்
> இரவு திருவாரூர் எந்தைபிரான் சென்ற
> பரவை திருவாயிற் படி'

என்னும் காளமேகப் புலவர் பாடற் கருத்தும்,

> 'மானுடர் காயந் தானும் வகுத்தது மனவாக் காதி
> ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக் காகஅன்றோ
> வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் தனைஅர்ச் சிப்பர்
> ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ'.

என்னும் சிவஞான சித்தியார் கருத்தும் ஒப்புநோக்கத்தக்கன.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஆளுடைய வடிகள் அருண்மாலை.

தேசகத்தி லினிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க
வாசகனே யானந்த வடிவான மாதவனே
மாசகன்ற நீதிருவாய் மலர்ந்ததமிழ் மாமறையின்
ஆசகன்ற வநுபவநா னநுபவிக்க வருளுதியே

தேடுகின்ற வானந்தச் சிற்சபையிற் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீ ழாடுகின்ற வாரமுதே
நாடுகின்ற வாதவூர் நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெலாம் வந்தொருக்கால் மாற்றுதியே

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்துபால்கலந்துசெழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து வுயிர்கலந்து வுவட்டாம லினிப்பதுவே

பெண்சுமந்த பாகப் பெருமா னொருமாமேல்
எண்சுமந்த சேவகன்போ லெய்தியதும் வைகைநதி
மண்சுமந்து நின்றதுமோர் மாறன் பிரம்படியாற்
புண்சுமந்து கொண்டதுநின் பொருட்டன்றோ புண்ணியனே

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தை
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்ப றவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறு மென்னிலங்கு நானடைதல் வியப்பன்றே

இராமலிங்க சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நால்வர் நான்மணிமாலை

அகவல்

வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நீற்கரு ணைக்கடன்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரோமுகி
யோதுவார் மனமெனு மோண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
வுளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன்றருமே.

சிவப்பிரகாச சுவாமிகள்

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சை.